செ.வெ.எண்: 813

நாள்: 29.09.2008

## பத்திரிக்கைச் செய்தி

**29.09.2008** அன்று **மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.என். நேரு** அவர்கள் தலைமையில் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான 2007-08 ஆம் ஆண்டிற்கான போனஸ் பேச்சுவார்த்தை தரமணியில் உள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தில் நடைபெற்றது. பேச்சுவார்த்தையில் **27** தொழிற்சங்கங்க பேரவைகளின் சார்பில் **54** பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர். பேச்சுவார்த்தையின் முடிவில் தொழிற்சங்கங்களின் கருத்துக்களை கேட்டறிந்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கும் 2007-08 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத் தொகையாக 20 சதவிகிதம் மற்றும் அரசு முன்னரே ஆணையிட்டுள்ளவாறு பண்டிகை முன் பணம் ரூ.2000/-மும் வழங்கப்படும் என அறிவித்தார்கள். போனஸ் மற்றும் கருணைத் தொகை வரும் அக்டோபர் 15ந்தேதிக்குள் வழங்கப்படும். இதனால் தொழிலாளர்கள் அதிகபட்சமாக **ரூ.8400/-** போனஸ் பெறுவார்கள். இதன் மூலம் போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதலாக சுமார் **90** கோடி ரூபாய் நிதி சுமை ஏற்படும் என அறிவித்தார்கள். பேச்சுவார்த்தையில் அரசு போக்குவரத்துத்துறை முதன்மைச்செயலர் திரு **தேபேந்திரநாத் சாரங்கி** இ.ஆ.ப. அவர்களும் மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு **மா. இராமசுப்ரமணியன்** அவர்கள் உள்ளிட்ட இதர போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9